[1975 March 22

Saltfield Industry in Ramanathapuram District.

*168. Q—THIRU RAMA SUBBAYYA (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the year in which the Saltfield Industry in Valinokkam area, Ramanathapuram District will commence ; and

(*b*) the estimated expenditure therefor ?

இராமநாதபுரம் மாவட்டத்தில் உப்பளத் தொழிற்சாலை.

திரு. இராம சுப்பையா (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் பகுதியில் உப்பளத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் வேலைத் திட்டம் எந்த ஆண்டு துவங்கும்?

(இ) அந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நடப்பாண்டில் தொடங்கப் பட்டுவிட்டது.

(இ) ரூ. 75 லட்சம்.

Solar Paddy Drier.

*169. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware that the Mechanical Engineering Department of the Annamalai University has designed a 'Solar Paddy Drier' ; and

(*b*) if so, whether the Government have any plans to popularise this device in the District of Thanjavur ?

நெல் உலர்த்தும் சூரிய வெப்பக்கருவி.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1975 மார்ச 22]

(அ) அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தின் இயந்திரப் பொறியியல் துறை நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்றை வடிவமைத்துள் ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இக்கருவியை தஞ்சாவூர் மாவட்டத்தில் பரப்புவ தற்கான திட்டங்கள் எதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) இல்லே.

திரு. கே. எஸ். கணபதி : தலேவரவர்களே, இந்த நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்று அமைப்பதற்கு என்ன செலவாகிறது? பரீட்சார்த்தமான நிலேயில்தான் இருக்கிறதா அல்லது செயல்படுத்தப்பட்டு வருகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலேவரவர்களே, இந்த நெல் உலர்த்தும் சூரிய வெப்பக் கருவி ஒன்று சோதனேக்காக அமைக்கப் பட்டது. அதனுடைய செலவு ஏறத்தாழ ரூபாய் 1,200 ஆயிற்று. இந்த சூரிய வெப்பக்கருவியை ஓட்டுவதற்கு ஒரு "ஹார்ஸ் பவர் மோட்டார்" வேண்டும். அதோடு மின்சாரம் வேண்டும். இவ்வளவு செய்த பிறகு ஒரு மணிக்கு அரை மூட்டை அதாவது 30 கிலோ என்ற அளவு நெல்தான் உலர்த்த முடியும். அதுவும் வெயில் அடித்தால்தான் உலர்த்த முடியும். எனவே இந்த இயந்திரமில்லாமல் இந்த அளவுக்கு உலர்த்த முடியு மென்று கருதித்தான் விவசாயிகளும் அரிசி ஆலேக்காரர்களும் இந்த இயந்திரத்தை விரும்பவில்லே. ஆகையால்தான் அதைப் பரப்புவதற்கும் அரசு முயற்சிகளே மேற்கொள்ளவில்லே. மத்திய அரசு இதை மூன் றுண்டு காலம் இன்னும் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று பணம் ஒதுக்கி அண்ணுமலேப் பல்கலேக் கழகத்திற்கு கொடுத்திருக்கிருர்கள்.

Wheat Cultivation in Tamil Nadu.

*170 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D.V.D'MONTE) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have evolved any new scheme to introduce wheat cultivation in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் நாட்டில் கோதுமை பயிரிடும் திட்டம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் கோதுமை பயிரிடும் புதிய திட்டம் எதனேயும் அரசு தயாரித்துள்ளதா?